## ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’ 10 மாடிக் கட்டடம் கட்டிக் கொடுத்தவர் எங்கள் தலைவர், கலைஞர்!

# இந்திய வரலாற்றையே புரட்டிப் போடும் போர்க்குணம் படைத்தவர் தலைவர் மு.க.ஸ்டாலின்!

### சட்டமன்றத்தில் பொதுப்பணித்துறை மானிய விவாதத்தில் – முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

சென்னை, ஆக.21-

**சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கையில் உரையாற்றிய முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், நாமக்கல் கவிஞர் மாளிகை 10 மாடிக் கட்டடம் கட்டிக் கொடுத்தவர் ‘எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்’ என்றும், ‘இந்திய வரலாற்றையே புரட்டிப் போடும் போர்க்குணம் படைத்தவர் எங்கள் கழகத் தலைவர் அவர்கள்’ என்றும் குறிப்பிட்டார்.**

பேரவையில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

தமிழ் வெல்லும் என்ற தாரக மந்திரத்திற்கு சொந்தக்காரர்; தமிழர் என்ற ஒரு சொல்லின் மூல மாக அனைத்து சாதியினரையும் ஒன்றிணைத் தவர்; தமிழ் ஞானத்தந்தை என்று சான்றோர் பெருமக்களும், ஆன்றோர் பெருமக்களும் பாராட் டிய தலைவர்; அவருக்கு நிகர் அவர்தான்; அவர் தான் எங்கள் தலைவர்; அவருக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு என்பது மக்களுக்கு மக்களாலேயே ஆளப்படுவது என்றார் ஆபிரகாம் லிங்கன். பிற சமூகக் கொள்கைகளை வெறுக்காமல் மதிக்க வேண்டும் என்று சொன்னவர் விவேகானந்தர். உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், உல கம் உங்கள் கையில் என்றார் Karl Marx. வாதங் கள் என்பது மக்களின் மகிழ்ச்சிக்கும், சுதந்திரத்திற்கும், புரட்சி என்பது அவர்களின் உரி மையை புனிதமாக்குவது என்றார் Fidel Castro . அந்த வரிசையில்தான் இந்திய வரலாற்றையே புரட்டிப்போடும் போர்க்குணம் படைத்த தலைவர், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொன்ன வள்ளலார் எண்ணம் கொண்ட தலைவர்; எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற மனித மேம்பாட்டு தத்துவத்தை நாட்டுக்குத் தந்த நற்றமிழ் நாயகர் எங்கள் தலை வர் அருமை அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர் களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

இளைஞர்களுடைய எழுஞாயிறு, நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், எங்களு டைய திராவிட இயக்கத்தின் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் கலைஞர், இன்றைய தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின், திராவிட இயக்கத்தினுடைய ஐந்தாம் தலைமுறை தலைவராக இருக்கக்கூடிய எங்களு டைய படைத்தளபதி எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்தநே ரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில ஆண்டுகளுக்கு முன் புகழ்பெற்ற இந்து தமிழ் தினசரி நாளிதழில், அதனுடைய ஆசிரிய ராக இருந்த சமஸ் ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ என்ற புத்தகத்தை தயாரித்து வெளியிட்டிருந்தார் கள். அந்தப் புத்தகம் பல்வேறு நபர்கள் படிப்பவர் கள் பார்த்திருக்கக்கூடும். பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்தப் புத்தகத்தை நான் காட்டவி ரும்புகிறேன்.

(எ.வ. வேலு ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ என்ற புத்தகத்தை பேரவைத் தலைவர் அவர்க ளுக்கு காண்பித்தார்.)

**கலாச்சாரக் கட்டமைப்புகளை உருவாக்கிய கலைஞர்!**

இப்படிப்பட்ட இந்தப் புத்தகம் லட்சக்கணக்கான அளவில் இன்றைக்கு தமிழ்நாட்டில் விற்பனை யாகிறது. அதற்குக் காரணம், அந்தப் புத்தகம் தமிழ்நாட்டினுடைய வரலாற்றையும், பண்பாட் டையும், கலாச்சார கட்டமைப்புகளையும் உரு வாக்குவதில் முன்னணி யில் இருந்த ஒரு தலை வர் கலைஞர் ஆவார். மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்ட தலைவர் கலைஞர்; பாரம்பரி யத்தை போற்றுவதும், பழமையான கட்டடங்க ளைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும், பொதுப் பணித் துறைக்கு முக்கியப் பங்கு என்பதை செயல் மூலம் விளக்கி அதைச் சிறப்பாக செய்து முடித்த வர் அண்ணன் கலைஞர் ;

அதனால்தான் இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டுமென்று சொல்வதற்கு காரணம் பல் வேறு ஆன்றோர் பெருமக்கள், சான்றோர் பெரு மக்கள், பத்திரிகையாளர்கள் அவர்களுடைய பரிணாம வளர்ச்சியைப் பற்றி இதில் கட்டுரை எழுதி இருக்கிறார்கள்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று சொன் னால், இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய தலை நகராக இருக்கக்கூடிய சென்னையில் இருக்கிற வள்ளுவர் கோட்டத்திலிருந்து குமரி முனையில் இருக்கிற 133 அடி சிலை இருக்கிறது பாருங்கள், அதற்கு இடைப்பட்டு இருக்கிற மாநகராட்சிகளாக இருக்கலாம்; நகராட்சிகளாக இருக்கலாம்; ஊராட் சிகளாக இருக்கலாம்; இந்த இடங்களிலெல்லாம் அண்ணன் கலைஞர் அவர்களின் அடையாளம் இல்லாத ஊரே கிடையாது என்ற அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புத்தகத்தில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அவர் வழியில் வந்த எங்கள் தலைவர், தமிழ்நாட் டில் அற்புதமான ஆட்சி நடத்திய திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டினுடைய கட்டமைப்பின்மூ லமாக மூலதனச் செலவை உருவாக்க முடியும். ஏனென்றால், மூலதனச் செலவு என்பது-- பல துறைகள் இருக்கிறது. ஒரு, ஒரு துறையும் செல வோடு மட்டும் சென்றுவிடும். ஆனால், நெடுஞ்சா லைத் துறை, பொதுப்பணித் துறை என்பது மூல தனச் செலவை ஈர்ப்பது. அரசாங்கத்திற்குச் சொத்து சேர்த்து வைப்பது. ஆனால், எங்களு டைய முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் மூலதனச் செலவை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல அடையாளங்களை, அண் ணன் கலைஞர் அவர்களின் வழியிலே தமிழ் நாட்டில் உருவாக்கித் தந்தார்கள். காலத்தையும் நேரத்தையும் கருதி, அவற்றில் சிலவற்றை மட் டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**ஏறுதழுவுதல் அரங்கம்!**

தமிழருடைய பாரம்பரிய விளையாட்டு ஜல் லிக்கட்டு; அதற்கு கீழக்கரையில் கலைஞர் ஏறுத ழுவுதல் அரங்கம்; சைதாப்பேட்டையில் 5 Star Hotel-ஐ போன்று எம்.சி.ராஜா அவர்களின் பெய ரில் 10 தளங்கள் கொண்ட மாணவர் விடுதி; கொளத்தூரில் 6 மாடிகள் கொண்ட பெரியார் மருத்துவமனை; மதுரையில் கலைஞர் நூலகம், தமிழ் இனத்திற்கு பெருமை சேர்த்த அண்ணன் கலைஞர் அவர்களுக்கு சென்னையில் உள்ள மெரினா கடற்கரையில் நினைவிடம், கள்ளக்கு றிச்சி, விருதுநகர், திருப்பத்தூர், மயிலாடுதுறை ஆகிய புதிய மாவட்டங்களுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்.

தமிழர்களின் வரலாறு என்பது 4,500 ஆண் டுகளுக்கு முற்பட்டது. சில நேரங்களில் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது, 3,000 ஆண்டுக ளுக்கு முற்பட்டது என்று நாம் சொல்வோம்; அது அல்ல. தமிழருடைய வரலாறு என்பது இந்தியா விலேயே அவன்தான் முதலிலே பிறந்து, வளர்ந் தவன். அதனால், அது 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு; அந்த வரலாற்றை வெளிப்படுத் துவற்காக சிவகங்கையில் கீழடியிலும், நெல்லை யில், பொருநையில் காட்சிப்படுத்தப்பட்ட அருங் காட்சியகங்களும் ஏராளம்! ஏராளம்! அப்படிப்பட்ட நம்முடைய தலைவர் தான்--

நமக்கும், நம்முடைய சந்ததிகளுக்கும் உழைத்த முத்தமிழர்களுக்கு, தியாகப் பெருமக் களுக்கு எங்கள் தலைவர், அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில்தான் பல் வேறு சிலைகளை அமைத்தார்கள். அதில் சில வற்றை மட்டும் நான் உங்களிடத்தில் சொல்ல விரும்புகிறேன். கிண்டியில் அயோத்திதாசப் பண் டிதருக்குச் சிலையுடன்கூடிய மணிமண்டபம். பசும்பொன் தேவர் திருமகனுடைய நினைவிடத்தில் புதிய இரண்டு மண்டபங்கள். பர மக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் அவர் களுக்குச் சிலையுடன் கூடிய மண்டபம். கிண்டி யில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்குச் சிலை, மருதுபாண்டியர்களுக்குச் சிலை, கட்டப் பொம்மன் அவர்களுக்குச் சிலை, வ.உ.சி. அவர் களுக்குச் சிலை, ஈரோட்டில் சுதந்திர போராட்ட வீரராக இருந்த பொல்லான் அவர்களுக்கு அரங் கத்துடன்கூடிய சிலை, விழுப்புரத்தில் சமூக போராளி என்று சொல்லப்பட்ட, 21பேர் சுட்டு வீழ்த் தப்பட்ட, அவருக்கு நினைவு மண்டபம் கட்டிய தோடு மட்டுமல்ல அவருக்குச் சிலை, கோவில்பட் டியில் கே.ராஜநாராயண் அவர்களுக்குச் சிலை, சமூகநீதி காவலர் என்று சொல்லப்படுகின்ற வி.பி. சிங் அவர்களுக்குச் சிலை, அப்துல் கலாம் அவர் களுக்குச் சிலை, டாக்டர் சுப்பராயன் அவர்களுக் குச் சிலை, கொடி காத்த திருப்பூர் குமரனுக்குச் சிலை, AG என்று அன்போடு அழைக்கப்பட்டு, இதே மாமன்றத்தில் சிறப்பாக பணியாற்றிய தென் ஆற்காட்டின் திராவிட இயக்கத்தினுடைய தலை வராக இருந்த ஏ.கோவிந்தசாமி அவர்களுக்குச் சிலை, சிந்துவெளி நாகரிகத்தை திராவிட நாகரி கம் என முதன்முதலாக கண்டுபிடித்து கூறிய சர் ஜான் மார்ஷல் அவர்களுக்குச் சிலை. இன்னும் சொல்லப்போனால், எழும்பூரில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சிலை. இப்படி நம்முடைய சமுதாயம் பிற்காலத்தில் தெரிந்தகொள்ள வேண் டுமென்பதற்காக, அந்தப் பெருமகனார்களுக்கெல் லாம் சிலை அமைத்த வரலாறு திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு.

**தரக் கட்டுப்பாட்டு அலகு!**

கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு இந்தத் துறையில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட் டன. அதில் கோவையைத் தலைமையிடாமாகக் கொண்டு தலைமைப் பொறியாளர் மேற்பார்வை யில் ஒரு புதிய மண்டலம் நம்முடைய ஆட்சியில் தொடங்கப்பட்டது. புராதான கட்டடங்களைப் பாது காப்பதற்காக புதிய அலகு ஒன்று தொடங்கப்பட் டது. மாவட்டத்திற்கு ஒரு செயற்பொறியாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. தரக்கட்டுப்பாட்டு அலகு என்று புதிதாக தொடங்கப்பட்டது. உயர்கல்வித் துறைக்கு கட்டடம் கட்டுவதற்காக திட்ட அலகு என்று தொடங்கப்பட்டது. டெல்லியில் நம்முடைய சிறப்பு விருந்தினர்கள் செல்வதற்கு, அலுவலர்கள் செல்வதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவ தற்கு, அமைச்சர் பெருமக்கள் அரசு அலுவல் கார ணமாக டெல்லி செல்கிறபோது, அங்கு தங்குவ தற்காக கட்டப்பட்டிருக்கிறது.

டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்க லைக்கழகத்தில் ஐயன் திருவள்ளுவருக்குச் சிலை; 2021-2026 இடைப்பட்ட காலங்களில் 406 உதவிப் பொறியாளர்கள் Civil Engineer, 104 உதவிப் பொறியாளர்கள் மின்னியல் Engineer, கொதிகலன் இயக்கத்திலே 4 முதுகலைப் பொறி யாளர்கள், 6 இளநிலை Architects ஆகிய பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

பழமையைப் பாதுகாக்கின்ற வகையில் 100 ஆண்டுகளைத் தாண்டிய Heritage Buildings என்ற அடிப்படையில் 22-9-2022 முதல் 30-3-2026 வரை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கும், மருது பாண்டிய சகோதரர்களுக் கும் போர் பயிற்சி எடுத்த இடம் எதுவென்றால் சங்கரபதிகோட்டை. அந்த சங்கரபதிகோட்டை யோடு சேர்ந்து 64 கட்டடங்கள் 100 ஆண்டுக ளைக் கடந்த கட்டடங்கள். Heritage Buildings என்ற அந்தக் கட்டடங்கள் ரூ.470.58 கோடி திட்ட மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல பணிகள் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் முடிந்துவிட்டன. சில பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, நான் ஆரம் பத்திலே குறிப்பிட்டதைப்போல இந்தியாவினு டைய தலைநகரிலே இன்றைக்கு நாம் எல்லோரும் தங்குவதற்கு, நான் நாம் என்று சொல்வது அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், ஐ.ஏ.எஸ்.



அதிகாரிகள், டெல்லிக்குச் சென்றால் அங்கே இருக்கின்ற இடம் போதுமானதாக இல்லை. எனவே, கூடுதலாகக் கட்ட வேண்டுமென்று வைகை இல்லம் என்று-அந்த வைகை என்ற பெயரை வைத்தவர் எங்கள் அண்ணன் கலை ஞர் தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த வைகை இல்லம் கட்ட வேண்டுமென்று இன்றைக்கு பழையக் கட்டடங்கள், நீண்ட நெடிய கட்டடங்கள் என்ற காரணத்தினால், அவற்றை அப்புறப்படுத்திவிட்டு, இன்றைக்கு புதியதாக 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 3 இலட்சம் சதுர அடி பரப்பளவில் முக்கியமான கட்டடங்களாக 39 suite rooms, 60 deluxe rooms, 72 படுக்கைகள் கொண்ட 9 தங்கும் வீடுகள் இன்றைக்கு நம்மு டைய திராவிட மாடல் ஆட்சியில் கட்டப்பட்டிருக் கின்றன. ஆக, இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் கடைசியாக 5-வது ஆண்டு நம்பிக்கையோடு தான் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய் தோம். அதிலே, சென்ற 2025-2026 ஆண் டில்—நல்லவர்களையும், மாணவர்களையும், பட்டதாரிகளையும் வளமாக்குவது கல்விதான். கல்விக்கு நிகரானது ஒன்றும் இல்லை. அந்தக் கல்வி உலக வரலாற்றை தெரிந்துகொள்வதற் கும், பொருளாதார வளர்ச்சியைப் பெறவும், கல் வியினுடைய விரிவாக்கம் அவசியம் என்ற தேவையை அறிந்த காரணத்தினால், எங்களு டைய முதலமைச்சராக இருந்த அண்ணன் மு.க. ஸ்டாலின் நூலகம் அவசியம் தேவை என்று கருதினார்கள். நூலகத்தோடு இன்றைக்கு digital நூலகமும் தேவை என்பதை உணர்ந்த எங்கள் தலைவர் திருச்சியில் பெருந்தலைவர் காமராசர் பெயரில் நூலகம், கடலூரில் நம்மு டைய சமூகக் காவலர் அஞ்சலை அம்மாள் பெய ரில் நூலகம், சேலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் நூலகம், நெல்லையில் காகிதே மில்லத் பெயரில் நூலகம், கோயம்புத்தூரை பொறுத்த வரை தந்தை பெரியார் பெயரிலே நூலகம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும் தருவாயில் அது இருந் தது. நான்கூட திறந்துவிட வேண்டுமென்று முத லமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அப்பொழுது தலைமைச் செயலாளராக இருந்தவர், ஆட்சிக்கு நாம்தான் வரப்போகிறோமே நாம் திறந்துவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையூட்டினார். மக்கள் நம் மீது வைத்திருந்த பாசம்; அப்படிதான் நாங்களும் கரு தினோம். ஆனால், அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டு 5 சதவிகித கட்டடப் பணிகள் நிலுவையில் இருந்தது. கோயம்புத்தூரிலே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் சென்று, அந்த நூலகத்தை கண்டு களித்து, ஆய்வு செய்து அதற்குப் பிறகு பேட்டி கொடுத்திருந்தார். அதை பத்திரிகையிலே நான் பார்த்தேன். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், நீங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலம் ஆகிறது. கொள்கை தலைவர் என்று நீங்கள் பெரியாரை ஏற்றுக் கொண்ட இந்த நிலையிலே, மூன்று மாத காலம் ஆகிறது இன்னும் இந்த நூலகத்தைத் திறக்காமல் இருப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். ஆக, இந்த நூலகம் இன்றைக்கு மக்கள் பயன்பாட்டிற்கு இல் லாமல் கிடப்பிலேயே கிடக்கிறது என்பதையும் நினைவூட்டு கிறேன். அதோடு மட்டுமல்ல, எங் கள் தலைவர் கேரளாவிலே ஆறுகுட்டி என்ற இடம் உண்டு. அது வைக்கம் போராட்டத்தில் பங் கேற்ற, நம்முடைய தந்தை பெரியார் சிறை சென்ற இடம் ஆறுகுட்டி. அந்த ஆறுகுட்டியிலே அன்றைய கேரள முதலமைச்சரிடம் கேட்டு, ஆறு குட்டியிலே ஒரு நினைவுச் சிறைச்சாலை அமைக்க வேண்டுமென்று முதலமைச்சர் கடி தம் எழுதினார்கள். நானே நேரடியாகச் சென்று கேரள முதலமைச்சர், தோழர் பினராயி விஜயன் அவர்களை சந்தித்தேன். அந்த 70 சென்ட் இடத்தை தானமாக நம்முடைய அரசாங்கத்திற்கு கொடுத்தார்கள். அதிலே ஒரு சிறை அமைக்க வேண்டும் என்பதற்காக ரூ.3.90 கோடி நிதியை எங்கள் அண்ணன் ஒதுக்கித் தந்தார்கள். நானே கேரளாவின் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர் களை அழைத்துக்கொண்டு, அடிக்கல் விழா நடத் தினோம். அது என்னவோ தெரியவில்லை, பெரி யாரை பற்றி பெருமையாகப் பேசுகின்ற நீங்கள் இந்த மூன்று மாத காலம் என்னென்ன கிடப்பிலே போட்டுவிட்டீர்கள். அமைச்சர் பதிலுரையிலே அதற்கான விளக்கத்தை தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏன் னென்று சொன்னால், தந்தை பெரியார் அவர் களை கொள்கை தலைவர் என்று அடிக்கடி நீங் கள் தம்பட்டம் அடித்துக்கொள்கிற காரணத்தினால் அதை உங்களுக்கு நினைவூட்ட நான் விரும்புகிறேன். நாங்கள் எங்கள் ஆட்சியிலே, உண்மையாக சொல்கிறேன் பெருந்தலைவர் காமராசர் மீது எங்களுக்கு நிரம்பப் பற்று உண்டு.

நிரம்ப பற்று இருக்கின்ற காரணத்தினால்தான் திருச்சியில் கூட பெருந்தலைவர் காமராஜர் அவர் களின் பெயரிலே ஒரு நூலகத்தை இன்றைக்கு நாங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், காம ராஜருக்கு என்று திடீரென்று ஒன்றும் எங்களுக்கு பாசம் வந்துவிடவில்லை. இன்னும் சொல்லப் போனால், 1961 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் காங்கிரஸ்தான் ஆண்டு கொண்டிருந்தது. அப் போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர் தான் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந் தார்கள். அன்றைக்கு இருந்த மேயர் பேரறிஞர் அண்ணாவைப் பார்த்து உங்களுக்கு சிலை வைக்க வேண்டும் என்றார். சென்னை மாநக ராட்சியில் சிலை வைப்பதற்கு மேயராகிய எனக்கு அதிகாரம் உண்டு என்று சொன்னபோது, அண்ணா சொன்னாராம், இல்லை, இல்லை எனக்கு சிலை முக்கியமல்ல, சுதந்திரப் போராட் டத்தில் போராடியர் நம்மவர் பெருந்தலைவர் காம ராஜருக்கு நீங்கள் சிலை வையுங்கள் என்று அண்ணா அப்படித்தான் குறிப்பிட்டாராம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அன்றைக்கு 1961 ஆம் ஆண்டில் திரா விட முன்னேற்றக் கழகத்தின் தோழர் சென்னை மாநகராட்சியின் மேயர் Madras Gymkhana Club என்று சொல்லப்படுகிற அன்றைய மௌண்ட் ரோடு, இன்றைய அண்ணா சாலையில் பெருந் தலைவர் காமராஜர் சிலையை நிறுவி, அன் றைக்கு இருந்த பிரதம அமைச்சர் நேரு அவர் களை அழைத்துக் கொண்டு வந்து அந்த சிலையை திறந்த வரலாறு யாருக்கு என்று சொன் னால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிட விரும் புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல, 13-4-1955-ல்தான் பெருந்தலைவர் காமராஜர் முதன்முதலாக முத லமைச்சராக வருகிறார். அதற்கு முன்புவரை இராஜாஜி தான் இருந்தார். இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக, இராஜாஜி இராஜினாமா செய்தார். பெருந்தலைவர் காமரா ஜர் முதலமைச்சரானார். ஆனால், சட்டமன்ற உறுப்பினராக இல்லை. சட்டமன்ற உறுப்பின ராக 6 மாத காலத்திலே ஆக வேண்டும். அப்படிப் பட்ட நிலையில்தான் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் சகோதாரர் பிறந்த மாவட்டம் எது என்றால் வட ஆற்காடு மாவட்டம். இன் றைக்கு அது வேலூர் மாவட்டம். வட ஆற்காடு மாவட்டத்தில்தான் என்னுடைய சொந்த ஊர், என் னுடைய ஊரும் இருந்தது. அதற்குப் பிறகு, திரு வண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை மாவட்டம், திருப்பத்தூர் மாவட் டம் என்று நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு விட்டது.

ஆனால்,. . .

தம்பட்டம் என்பது unparliamentary word இல்லை. நம் சுயபுராணம் என்று சில நேரங்க ளில் சொல்வோம், தம்பட்டம் என்று சொல்வோம், விளம்பரப்படுத்திக் கொள்ளுதல் என்று சொல் வோம். இப்படித்தான் அதற்குப் பொருள் உண்டு. வேறொன்றுமல்ல.

எனக்குக் கிடைத்தத் தகவலை நான் சொன் னேன், எனக்குக் கிடைத்தத் தகவலை நான் சொன்னேன், அவரை பெருமைப்படுத்த வேண் டுமென்பதற்காக. வட ஆற்காடு மாவட்டம் என்பது ஒரு பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்தில் கே.வி. குப்பம் தொகுதியிலே தொண்டங்குறிச்சி என்கிற இடத்தில் அவருடைய தந்தையார் ராஜேந்திர ரெட் டியார் அவர்களிடமிருந்து கிடைத்த தகவலை வைத்து சொன்னேன். அது இல்லையென்ற மறுத்தால் அதைப் பற்றி எனக் கொன்றும் இல்லை. நான் அதை ஏற்றுக்கொள்கி றேன்.

அதற்குப் பக்கத்தில்தான் குடியாத்தம் என்கிற தொகுதி இருக்கிறது. குடியாத்தம் தொகுதியில் தான் பெருந்தலைவரை நிறுத்த வேண்டுமென்று முடிவு செய்கிறார்கள். 6 மாதங்களில் MLA ஆனால்தான், முதலமைச்சராக இருக்க முடியும். அப்படிப்பட்ட நிலையிலே குடியாத்தத்தில் அவர் நிற்க வேண்டுமென்று முடிவு செய்தபொழுது, அண்ணாவினுடைய பெருந்தன்மையைப் பாருங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறு வனத் தலைவரின் பெருந்தன்மையைப் பாருங் கள், அண்ணா சொல்கிறார், பச்சைத் தமிழன் பெருந்தலைவர் காமராஜர் தேர்தலிலே நிற்கிறார், அவரை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் நிற்காது என்று சொல்லிவிட்டதோடு மட்டுமல்ல, ஒரு கட்டுரையைத் தீட்டுகிறார். ‘குணாளா, குலக் கொழுந்தே வருக, வருக’ என்று தீட்டி எழுதிய தோடு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் உழைத்து பெருந்தலைவர் காமராஜர் அந்த இடைத் தேர்தலிலே வெற்றிப் பெற்றார் என்பது வரலாறு.

அதோடு மட்டுமல்ல, 1967-ல் திராவிட முன் னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறது. 1968-ல் அண்ணாவின் தலைமையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துகிறார்கள். நம்முடைய அண்ணா நேரடியாக பெருந்தலைவர் காமராஜ ருடைய இடத்திற்குச் செல்கிறார். அங்கு சென்று, நீங்கள்தான் அந்த மாநாட்டிலே வரவேற்புரை நிகழ்த்த வேண்டும் என்று கேட்கிறார். பெருந்த லைவர் காமராஜர் அன்றைக்கு அந்த உலகத் தமிழ் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தி, அந்த மாநாட்டிற்கு பெருமை சேர்த்த வரலாறு உண்டு.

1975 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் மறைந்தபொழுது, அன்றைக்கு தமிழ்நாட்டினு டைய முதலமைச்சராக எங்கள் அண்ணன் கலைஞர் அவர் இருந்தார்கள். செய்தி கேள்விப் பட்டவுடனேயே திருமலைநாயக்கர் தெருவிற்கு சென்று, அவரே கிட்டேயேயிருந்தார். அன் றைக்கு இரவு மழை. அந்த மழையைக்கூட பாரா மல், அன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராஜாராம் நாயுடு அவர்களையும் அழைத்துக் கொண்டு அவரே நேரடியாகச் சென்று, இடத்தைத் தேர்வு செய்து, பெருந்தலைவர் காமராஜர் அவர் களுடைய மறைவை, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு அரசு மரியாதையுடன் வைத்த தோடு மட்டுமல்ல, அவருக்கு சிலை அமைத்து, மணிமண்டபம் கட்டியத் தலைவரும் எங்களு டைய தலைவர் அண்ணன் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**காமராசருக்கு குமரி முனையில் மணிமண்டபம்!**

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வந்திருக் கிற நண்பர்களுக்கெல்லாம் தெரியும். கடற்கரை யில் அனுமதியே கிடையாது என்று சொல்லிவிட்ட நேரத்தில், அண்ணன் கலைஞர் அன்றைக்கு ஒன்றிய அரசாங்கத்தை அணுகி, இடத்தைப் பெற்று 1999 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காம ராஜருக்கு குமரி முனையில் மணிமண்டபம் கட் டித் தந்ததும் அண்ணன் கலைஞர்தான். பெருந் தலைவர் காமராஜருடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று தனிச் சட்டத்தை உருவாக்கி, அன்றையதினம் பள்ளிக் கூடங்களிலே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி அவைகள் எல்லாம் வைக்க வேண்டுமென்று பெருமை சேர்த்தவர் கலைஞர் தான். ஆக, அவர்மீது எங்களுக்கு அவ் வளவு பற்று உண்டு; பாசம் உண்டு; அவர்மீது மரியாதை உண்டு; அதில் ஒன்றும் மாற்றம் அல்ல.

நான் இந்த அரசைக் கேட்க விரும்புவது, இந் தியாவிலே பல்வேறு மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் என்ற ஒரு திட்டம், இன்னும் சொல் லப்போனால், இலண்டன், கனடா போன்ற நாடு களிலே அதனைத் தொடர்ந்து நாங்கள் நிறை வேற்றப்போகிறோம் என்று சொன்ன திட்டம், அந்தத் திட்டத்தினுடைய பெயர் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். நான் கேட்க விரும்புவது, அந்தக் காலை உணவுத் திட்டத்தை மாற்றி பெருந்தலைவர் காமராஜர் பெயரை வைக்க வேண்டிய அவசியம் என்ன? நான் கேட்க விரும்புவதெல்லாம், (குறுக்கீடு) இருங் கள். நான் பேசி முடித்தவுடனேயே பேசலாம், உயர் கல்வித் துறை அமைச்சர் உட்காருங்கள். நீங்கள் அமைச்சராக இருக்கிறீர்கள். முதலமைச் சர் அவர்களிடத்தில் சொல்லி, ஒரு புதியத் திட் டத்தை உருவாக்கி காமராஜர் பெயரை வையுங் கள், நாங்கள் வரவேற்றே பேசுவோம். நான் கேட்க விரும்புவது, அதில் வேறு என்ன பெயர்-- , இன்னும் அதில் ஒரு ரகசியம் சொல்லட்டுமா? அந்தத் திட்டம் வருகிறபோது, ஒரு discussion வரு கிறது. நான்கூடச் சொன்னேன், இந்தப் பிள்ளை களுக்கு ஒரு காலத்தில் மதிய உணவுத் திட்டத்திற்கு காமராஜர் திட்டம் என்று ஒரு பெயர் இருக்கிறது; மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பெயர் இருக்கிறது; என்று சொல்லிவிட்டு, அன்றைக்கு இருந்த Chief Secretary-யோடு அந்த அமைச்சர வையில் இருந்த நான் சொன்னேன். ஏன் இந்தத் திட்டத்திற்கு மு.க. ஸ்டாலின் காலை உணவுத் திட்டம் என்று பெயர் வைக்கலாமே என்று நான் கேட்டபொழுது, முதலமைச்சர் சொன்னார், அப் படியெல்லாம் இல்லை, யார் பெயரையும் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. முதலமைச்சர் என்பது பொதுவான பெயர். பொதுவான சொற் றொடர் அது. அது யாரையும் குறிப்பிடுவது அல்ல. எனவே முதலமைச்சர் என்று சொன்னால், யார் வந்தாலும் அதை மாற்றம் செய்ய மாட்டார்கள். யார் வந்தாலும் முதலமைச்சர் தானே! அந்த நிலையிலே அதை மாற்ற வேண்டாம் என்று சொல்லிதான் பெயர் வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், என்னவோ தெரிய வில்லை. நீங்கள் அந்த முதலமைச்சர். . .

காமராஜர் பெயரில் நாங்கள் நூலகமே கட்டிக் கொண்டிருக்கிற, அந்தளவுக்கு அவர்மீது மரி யாதை உண்டு. காமராஜர் பெயரை ஒரு புதிய திட்டத்திற்கு வைத்திருந்தால் நாங்களும் பாராட்டி இருப்போம். ‘அண்டை வீட்டு நெய்யே, பொண் டாட்டி கையே’ என்று எங்கள் ஊரில் ஒரு பழ மொழி உண்டு. பக்கத்து வீட்டு நெய் ஆனால் என் சம்சாரத்தின் மூலமாக போட்டால்தான் அது இனிக்கும், சுவைக்கும் என்று சொல்கிற ஒரு பழ மொழி உண்டு. அப்படி நாங்கள் வைத்த திட்டத்திற்கு நீங்கள் பெயர் வைப்பது என்பது அப் படித்தான் பொருத்தம் என்று நான் கருதுகின் றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந் தத் திட்டம் வந்ததைப் பற்றி உங்களுக்கும், எனக்கும் கவலை இல்லை.

அமெரிக்காவின் அதிபராக இருந்த ஜான் கென் னடி , என் நாடு பொருளாதார வளர்ச்சி பெற்றிருப் பதற்கு காரணம் எதுவென்றால், நெடுஞ்சாலைக ளின் பங்கு அதிகம் என்று சொன்னார். சாலைகள்தான் மக்களுடைய வாழ்க்கைத் தரத் தையும், நாட்டினுடைய பொருளாதாரத்தையும் உயர்த்த ஆதாரமாக திகழ்கிறது. இன்று இந்தியா விலே தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளா தார வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதில் நெடுஞ்சாலைத் துறையினுடைய பங்கு என்பது அதிகம். எங்கள் தலைவர் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோதுதான் திராவிட மாடல் ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறைக்கு முக்கியத்துவம் தந்து 67,211 கிலோ மீட்டர் நீளம் சாலை பராமரிக்கப்பட்டது. 36 இரயில்வே மேம் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 37 இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின் றன. விபத்தைக் குறைப்பதற்காக 2,638 இடங் களும், black spot 415 இடங்களும் கண்டறியப் பட்டு மேம்படுத்தப்பட்டன. 18-11-2021 முதல் சாலை விபத்துகளில் ஏற்படும் உயிர்ச் சேதத்தைக் குறைப்பதற்கு இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும்-48 திட்டத்தைக் கொண்டு வந்தோம்.

கிராமப் பகுதிகளில் அதிக அளவிலான தரைப் பாலங்களை, குறிப்பாக 1,166 தரைப் பாலங் களை, உயர் மட்டப் பாலங்களாக அமைத்தோம். கோவையில் 1,791 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10.5 கி.மீ. நீளத்திற்கு உயர் மட்டப் பாலம் அமைத்து, விஞ்ஞானி ஜி.டி. நாயுடு அவர்களது பெயரை சூட்டியிருக்கிறோம்.

மதுரை, சிவகங்கை மாவட்டங்களை இணைக் கும் 1.33 கி.மீ. மேம்பாலம் கட்டுவதற்கு வீர மங்கை வேலுநாச்சியார் பெயர் சூட்டப்பட்டது. அதோடு மட்டுமல்ல; குமரியில் ஐயன் விவேகா னந்தர் நினைவுப் பாறைக்கும் திருவள்ளுவர் சிலைக்கும் கடல் நடுவே கண்ணாடி அறைப் பாலம் கட்டப்பட்டு, 30-12-2024 அன்று அன் றைய முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத் தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும் புகிறேன்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

## டெல்லி: ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் அய்யன் திருவள்ளுவருக்குச் சிலை!